


## 26. 07. 2025

## தலைப்பு செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி தூத்துக்குடியில் இன்று 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதோடு புதிய திட்டங்களையும் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

2. தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா தலங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

3. கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் மற்றும் முப்படை தலைவர்கள் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்தினர்.

4. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்று சூழலுடன் இணைந்த தொழில் வளர்ச்சி திட்டங்கள் ஆராயப்படுவதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

5. ஜார்ஜியாவில் ஃபிடே மகளிர் செஸ் உலக சேம்பியன் பட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் கொனேரு ஹம்பியும் திவ்யா தேஷ்முக்கும் மோதுகின்றனர்.

## இனி விரிவான செய்திகள்

*******

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 2 நாள் பயணமாக இன்று தமிழகம் வருகிறார்.

தூத்துக்குடியில் இன்றிரவு 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதோடு புதிய திட்டங்களையும் தொடங்கிவைக்கிறார்.

450 கோடி ரூபாய் மதிப்பில் புதிய விமான முனைய கட்டிடத்தை மக்கள் பயன்பாட்டிற்காக பிரதமர் திறந்துவைக்கிறார்.

**இதுகுறித்து தூத்துக்குடியிலிருந்து எமது சிறப்பு செய்தியாளர் ஜாய்**

**வாய்ஸ்**

தொடர்ந்து பிரதமர் விக்கிரவாண்டி தஞ்சாவூர் சாலை வழிதடத்தின் கீழ் 2 ஆயிரத்து 350 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட சேத்தியாதோப்பு - சோழாபுரம் நான்குவழி பாதை,

200 கோடி ரூபாய் மதிப்பிலான தூத்துக்குடி துறைமுக 6 வழிசாலை பணிகளை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 285 கோடி ரூபாய் மதிப்பிலான வடக்கு சரக்கு தளவாட மையத்தையும் பிரதமர் திறந்துவைக்க உள்ளார்.

கூடங்குளம் அணுமின்நிலைய 3, 4 அலகிலிருந்து 550 கோடி ரூபாய் செலவிலான மின் பகிர்மான அமைப்பிற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

துத்துக்குடியில் தமது நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு இன்று நள்ளிரவு திருச்சி வரும் பிரதமர், நாளை காலை அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் மாமன்னன் ராஜேந்திர சோழனின் ஆடி திருவாதிரை விழாவில் பங்கேற்று ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தையும் வெளியிடுகிறார்.

பிரதமரின் அரியலூர் வருகை குறித்து எமது செய்தியாளர்

**வாய்ஸ்**

அரியலூர் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு மீண்டும் திருச்சி விமான நிலையம் வரும் பிரதமர் அங்கிருந்து தனி விமானம் மூலம் புதுதில்லி புறப்பட்டு செல்கிறார்.

பிரதமரின் வருகையை ஒட்டி திருச்சி அரியலூர் புதுக்கோட்டை மாவட்டங்கள் உச்சகட்ட பாதுகாப்பு வளையத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதனிடையே தமது வெளிநாட்டு அரசு முறை பயணத்தின் ஒருபகுதியாக பிரதமர் மாலத்தீவில் 60ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களில் இன்று சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

முன்னதாக அந்நாட்டு துணை அதிபர் உசைன் முகமதுடன் இருதரப்பு பிரநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகளை பிரதமர் மேற்கொண்டார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித்தோவல் வெளியுறவுத்துறை செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் உரையாற்றும் 124ஆவது மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை இடம்பெறுகிறது.

*******

**கஜேந்திரசிங் ஷெகாவத்**

சோழர்களின் வரலாற்றையும் அவர்கள் கட்டமைத்த கோவில்களின் கலை பாரம்பரித்தையும் உலகிற்கு பறைசாற்றும் முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

தஞ்சை அரண்மனை கட்டங்களை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசு கலாச்சார மையங்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக எடுத்துரைத்தார்.

தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா தலங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

*******

**பியூஷ்கோயல்**

இந்தியா - பிரிட்டன் இடையே கையெழுத்தான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இருநாடுகளின் வர்த்தகத்தை ஆக்கப்பூர்வமான முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் என்று, மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இதனை தெரிவித்த அவர் பிரிட்டன் நாட்டின் நாடாளுமன்ற ஒப்புதலுக்காக காத்திருக்கும் இந்த ஒப்பந்தத்தால், இந்திய விவசாயிகள், வர்த்தகர்கள் பயனடைவார்கள் என்றார்.

சிறு குறு தொழில்முனைவோர், இளையோர், மீனவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் புதிய வாய்ப்புகளுக்கு இந்த ஒப்பந்தம் வகை செய்வதாக அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் நாம் ஏற்றுமதி செய்யும் 99 சதவிகித பொருட்களுக்கு வரி சலுகை கிடைக்கப்பெறும் என்றும் திரு.பியூஷ்கோயல் குறிப்பிட்டார்.

*******

## கார்கில் போர்

கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்ற 26வது விஜய் திவஸ் இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்ட செய்தியில் நாட்டின் பாதுகாப்பிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக கூறினார்.

புதுதில்லி தேசிய போர் நினைவு சின்னத்தில் பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் கார்கில் போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவாக மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சவ்ஹான்

ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர திவேதி,

விமானபடை தளபதி ஏர் சீப் மார்ஷல் ஏ.பி.சிங்,

கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே. த்ரிபாதி உள்ளிட்டோரும் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

லடாக் ட்ராஸில் அமைந்துள்ள கார்கில் போர் நினைவு சின்னத்தில் அஞ்சலி செலுத்திய ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி 1999ஆம் ஆண்டு உயரமான மலை

பகுதிகளில் கடினமான சூழலில் பாகிஸ்தான் படைகளுக்கு எதிராக வீர தீரத்துடன் போரிட்டு உயிர் தியாகம் செய்து தேசத்தில் அமைதியை நிலைநாட்டிய வீரர்களின் துணிச்சல் என்றென்றும் போற்றப்படும் என்று கூறினார்.

கார்கில் போரில் வெளிப்படுத்திய அதே வீரத்தையும், தீரத்தையும் ஆபரேசன் சிந்தூர் துல்லிய ராணுவ தாக்குதலின் போதும் முப்படை வீரர்கள் வெளிப்படுத்தியதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நாட்டின் வான், பாதுகாப்பு கட்டமைப்பு குறித்து பெருமிதம் தெரிவித்த அவர், ட்ரோன் மற்றும் ஏவுகணை அச்சுறுத்தலுக்கு எதிராக நம் வான் படை வலுவான அரணாக திகழ்வதாக குறிப்பிட்டார்.

நாட்டின் பாதுகாப்பிற்காக உயிர்நீத்த துணிச்சல்மிகு ராணுவ வீரர்களுக்கு வணக்கங்களை தெரிவித்துக்கொள்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறினார்.

வேலூர் சிப்பாய் நினைவு தூண் அருகே இன்று திரளான முப்படை முன்னாள் வீரர்கள் கூடி கார்கில் போரில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் நடைபெற்ற கார்கில் வெற்றி ஊர்வலத்தில் ஏராளமான முன்னாள் ராணுவத்தினர் பங்கேற்றனர்.

*******

டி.ஆர்.பி.ராஜா

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்று சூழலுடன் இணைந்த தொழில் வளர்ச்சியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்

ஆராயப்படுவதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் அருகே மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான இடத்தேர்வு பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இப்பகுதி மக்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் டைடல் பார்க் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

குமரி மாவட்டத்தில் சுற்றுலா சார்ந்த தொழில்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

*******

**துரைமுருகன்**

தமிழக கிராம பகுதிகளில் குறுகிய சாலைகள் காணப்படுவதால் தனியார் துறையினர் மினி பேருந்துகளை இயக்க முன்வர வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு.துரைமுருகன் கேட்டுக்கொண்டார்.

வேலூரில் மூன்றரை கோடி ரூபாய் மதிப்பிலான 7 குளிர் சாதன பேருந்துகளின் இயக்கத்தை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், அனைத்து பகுதிகளுக்கும் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கூறினார்.

*******

**அணை**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்துவருவதால் கர்நாடக அணைகளிலிருந்து 45 ஆயிரம் கன அடி தண்ணீர் விடுவிக்கப்படுவதால் ஒகேனக்கல் அருவியில் நீர்வரத்து தற்போது 28 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது தர்மபுரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதனிடையே மேட்டூர் அணையிலிருந்து இன்று வினாடிக்கு 35 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதை அடுத்து காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோவை பில்லூர் அணை முழு கொள்ளளவை எட்டிய நிலையில் அணையிலிருந்து வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுவதால் கரையோர பகுதிகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*******

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி கோவை மாவட்ட மலைபகுதிகளில் கன, மிக கன மழையும்,

திருநெல்வேலி, தேனி, தென்காசி மாவட்டங்களில் கன மழையும் இன்று பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோரம், மன்னார்வளைகுடா, குமரிக்கடல், வங்ககடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*******

இருவரி

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் இன்று நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில்

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு.காந்தி பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மத்திய காலணி பயிற்சி நிறுவனத்தின் சார்பில் உளுந்தூர்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் பயிற்சி பெற விரும்பும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த தகுதியுடையவர்கள் வரும் ஒன்றாம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டம் திருக்கண்ணங்குடி கிராமத்தில் வேளாண் பணிகளில் ட்ரோன் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான சிறப்பு பயிற்சி இன்று வழங்கப்பட்டது.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆரணியில் சட்டவிரோதமாக வலி நிவாரணி மாத்திரைகளை விற்பனை செய்த 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர். அவர்களிடமிருந்து போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

உதகையில் காற்றுடன் கன மழை பெய்துவருவதால் தொட்டபெட்டா காட்சிமுனை பைன் ஃபாரஸ்ட் உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

தூத்துக்குடி பனிமய மாதா பேராலயத்தின் 443ஆவது ஆண்டு பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

*******

செஸ்

ஜார்ஜியாவில் ஃபிடே மகளிர் செஸ் உலக சேம்பியன் பட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் கொனேரு ஹம்பியும் - திவ்யா தேஷ்முக்கும் இன்று மோதுகின்றனர்.

இறுதி போட்டியில் நுழைந்துள்ள இவ்விருவரும் அடுத்த ஆண்டு ஃபிடே மகளிர் கேண்டிடேட்ஸ் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் இதில் வெற்றிபெறுபவர் உலக சேம்பியன் பட்ட போட்டியில் சீனாவை சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் ஜூ வென்ஜனுடன் மோதும் வாய்ப்பை பெறுவர்.

*******

**பேட்மிண்டன்**

சீன ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை - மலேசியாவின் ஆரோன் சியா ஷோ ஊய் இணையை இன்று எதிர்கொள்கிறது.

*******

**கிரிக்கெட்**

மான்செஸ்டரில் இந்தியாவிற்கு எதிரான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய 3-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 7 விக்கெட் இழப்பிற்கு 544 ரன் எடுத்திருந்தது.

இங்கிலாந்து தற்போது 186 ரன் முன்னிலையில் உள்ளது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 358.

4ஆம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

*******

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**